பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# முஸ்லிமான ஒருவரின் வாயிலிருந்து கு∴ப்ரான வார்த்தைகள், கருத்துக்கள் வெளிப்படல் மற்றும் முஸ்லிமான ஒருவர் தனது செயற்பாடுகளில் கு∴ப்ரை வெளிப்படுத்துதல் தொடர்பான ஆய்வின் முடிவு.

## முஸ்லிமான சகோதரர் ஒருவரிடமிருந்து கு∴ப்ரான வார்த்தைகள் அல்லது கருத்துக்கள் வெளிப்பட்டால் அவ்வார்த்தைகள் அல்லது அக்கருத்துக்கள் தொடர்பாக அவர் மீண்டும் பைஅத் செய்து கொள்ளுதல் அவசியமானதா?

முஸ்லிமான சகோதரர் ஒருவரின் வாயிலிருந்து கு∴ப்ரான வார்த்தைகள் அல்லது கருத்துக்கள் வெளிப்பட்டால் அவ்வார்த்தைகள் அல்லது அக்கருத்துக்கள் தொடர்பாக அவர் அல்லாஹ்விடத்தில் 'பாவமன்னிப்புக் கோருதல் (தௌபா)' அவசியமானதே தவிர, அதற்காக அவர் பைஅத் செய்வது அவசியமானதல்ல.

*''இவர்கள் நிச்சயமாக 'கு∴ப்ருடைய' சொல்லைச் சொல்லிவிட்டு அதைச் சொல்லவே இல்லை என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கிறார்கள்; அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டபின் நிராகரித்தும் இருக்கின்றனர், (அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைக்கக் கருதித்) தங்களால் அடைய முடியாததையும் (அடைந்துவிட) முயன்றனர்; அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அவனுடைய அருட்கொடையினால் அவர்களைச் சீமான்களாக்கியதற்காகவா (இவ்வாறு) பழிவாங்க முற்பட்டனர்? எனவே அவர்கள் (தம் தவறிலிருந்து) மீள்வார்களானால், அவர்களுக்கு நன்மையாக இருக்கும்; ஆனால் அவர்கள் புறக்கணித்தால், அல்லாஹ் அவர்களை நோவினை மிக்க வேதனை கொண்டு இம்மையிலும், மறுமையிலும் வேதனை செய்வான்; அவர்களுக்குப் பாதுகாவலனோ, உதவியாளனோ இவ்வுலகில் எவரும் இல்லை."*

(அல்குர்ஆன் : 9:74)

பாவமன்னிப்புக் கோருதல் தொடர்பில் ஏனைய சகோதரர்கள் குறித்த சகோதரருக்கு நினைவூட்டல் செய்தல் வேண்டும். அல்லது தலைமைத்துவத்திடம் குறித்த சகோதரர் தொடர்பில் முறைப்பாடு செய்து, தலைமைத்துவம் குறித்த சகோதரருக்கு கு∴ப்ரை வெளிப்படுத்தியதற்காகத் தௌபாச் செய்து கொள்ளும்படி உபதேசம் செய்தல் வேண்டும். குறித்த சகோதரரும் தனது கு∴ப்ரான கருத்துக்கள், வார்த்தைகளுக்காக அல்லாஹ்விடத்தில் தௌபாச் செய்து - அதனைப் பகிரங்கப்படுத்துதல் வேண்டும். இங்கு தௌபாவின் வடிவம் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என வரையறுக்கப்படவில்லை. எனவே, ஒருவர் தனக்குத் தெரிந்த முறைகளில் தௌபாச் செய்து கொள்ளுதல் போதுமானதாகும்.

**சத்தியமும் சாட்சியமும்.**

கு∴ப்ரான வார்த்தைகளை வெளிப்படுத்திய ஒருவர் தொடர்பில் தௌபாச் செய்து கொள்ளும்படி நினைவூட்டல் செய்த பின்னர் அல்லது தலைமைத்துவத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் ''தான் அவ்வாறான வார்த்தைகளைக்

கூறவில்லை” என்று அவர் கூறினால், அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு அதனை நிரூபித்தல் வேண்டும். குஃப்ரான வார்த்தைகளை அல்லது கருத்துக்களை வெளிப்படுத்திய சகோதரர் ஒருவர் தொடர்பில் சாட்சிகள் மூலமாகத் தலைமைத்துவத்திடம் தெரியப்படுத்தப்பட்டதன் பின்னர் தலைமைத்துவம் குறித்த சகோதரரை விசாரணை செய்யும். குறித்த சகோதரர் “தான் குஃப்ரான கருத்துக்களைக் கூறவில்லை” என்று சத்தியம் செய்தால் சாட்சிகளது வாதத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர்த்து குற்றம் சாட்டப்பட்ட சகோதரரின் சத்தியத்தையே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

*ஸைத் இப்னு அர்கம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.*

*நான் என் சிறிய தந்தையாருடன் இருந்து கொண்டிருந்தேன். அப்போது (நயவஞ்சகர்களின் தலைவன்) அப்துல்லாஹ் இப்னு உபை இப்னி சலூல் என்பான், 'அல்லாஹ்வின் தூதருடன் இருப்பவர்களுக்கு (முஹாஜிர்களுக்கு) நீங்கள் செலவு செய்வதை நிறுத்தி விடுங்கள். அவர்கள் (அவரைவிட்டும்) விலகிச் சென்றுவிடுவார்கள்' என்று சொல்வதையும், மேலும், 'நாம் மதீனாவுக்குத் திரும்பினால் (எங்கள் இனத்தவர்களாகிய) கண்ணியவான்கள், இழிந்தோ(ரான முஹாஜி)ர்களை நகரிலிருந்து நிச்சயம் வெளியேற்றுவார்கள்' என்று கூறுவதையும் கேட்டேன். அதை நான் என் சிறிய தந்தையாரிடம் கூறினேன். அதை என் சிறிய தந்தையார் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் சொல்லிவிட்டார்கள். எனவே, இறைத்தூதர் ﷺ அவர்கள் அப்துல்லாஹ் இப்னு உபை மற்றும் அவனுடைய நண்பர்களுக்கு ஆளனுப்பினார்கள். அவர்கள் வந்து, 'நாங்கள் அப்படிச் சொல்லவேயில்லை' என்று சத்தியம் செய்தனர். எனவே, அவர்களை நம்பிவிட்ட இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னை (நம்ப) மறுத்துவிட்டார்கள். (என் வாழ்நாளில் அதற்கு முன்) இதுபோன்ற ஒரு கவலை ஏற்பட்டதேயில்லை எனும் அளவிற்கு என்னைக் கவலை ஆட்கொண்டது. எனவே, நான் என்னுடைய வீட்டில் (கவலையோடு) அமர்ந்திருந்தேன். அப்போது அல்லாஹ், '(நபியே!) இந்த நயவஞ்சகர்கள் உங்களிடம் வருகிறபோது' என்று தொடங்கி 'ஆயினும், நயவஞ்சகர்கள் அறிய மாட்டார்கள்' என்று முடியும் (திருக்குர்ஆன் 63:1-8) வசனங்களை அருளினான். உடனே, எனக்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் ஆளனுப்பினார்கள். (நான் அவர்களிடம் சென்றபோது) அவற்றை எனக்கு ஓதிக்காட்டி, 'ஸைதே! அல்லாஹ் உன்னை உண்மைப்படுத்திவிட்டான்' என்று கூறினார்கள்.*

*ஸஹீஹுல் புகாரி : 4901.*

குற்றம் சாட்டப்பட்ட சகோதரர் சத்தியம் செய்த பின்னர் அவர்மீது குற்றம் சுமத்திய சகோதரர்கள் அதாவது, சாட்சிகள் அவருக்கு எதிராகத் தங்களது சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில் சத்தியம் செய்தல் கூடாது. சாட்சிகள் சத்தியம் செய்வது நபிகளாரின் வாழ்க்கையில் நடைபெறாத விடயமாகும். எனவே, குற்றம் சாட்டப்பட்ட சகோதரர் மாத்திரமே அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தல் வேண்டுமே தவிர சாட்சிகள் சத்தியம் செய்வது அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல.

குற்றம் சாட்டப்பட்ட சகோதரர் ஒருவர் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்து அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கின்றபோது சத்தியத்தின் பெருமதியினை நன்கு உணர்ந்த நிலையிலேயே அவர் சத்தியம் செய்தல் வேண்டும். மாறாக, அவர்

பொய்ச்சத்தியம் செய்கின்றபோது அல்லாஹ்வின் பெயர் பகிரங்கமாக அவமானப்படுத்தப்படுகின்ற விடயத்தினையும் சகோதரர்களது உண்மையான வார்த்தைகள் உதாசீனப்படுத்தப்படுகின்ற நிலைமையினையும் நன்கு கருத்தில் கொள்ளுதல் வேண்டும். குறித்த இவ்விடயங்கள் அல்லாஹ்விடத்தில் தண்டனைக்குரிய குற்றங்களாக அமைந்துவிடும்.

*அன்றியும் அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்தார்களே (அவர்களுடைய) முகங்கள் கியாம நாளில் கறுத்துப் போயிருப்பதை நீர் காண்பீர்; பெருமையடித்துக் கொண்டிருந்த இவர்களின் தங்குமிடம் நரகத்தில் இருக்கிறதல்லவா?*

*(அல்குர்ஆன் - 39:60)*

எனவே, இதன்காரணமாக, உண்மையாகவே கு.்.ப்ரான வார்த்தைகளை வெளிப்படுத்திய ஒருவர் தொடர்பில் தலைமைத்துவத்திடம் சாட்சியங்கள் மூலமாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்ற பொழுது, அத்தகைய ஒருவர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு அதற்காகத் தௌபாச் செய்வதே சரியான நடைமுறையாகும். மாறாக, தன்னுடைய வார்த்தைகள் பிழையான முறையில் விளங்கிக் கொள்ளப்பட்டு அவை குறித்து தலைமைத்துவத்தினிடத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலைமையின்பொழுது மாத்திரமே அதனை மறுத்து அவர் சத்தியம் செய்வதில் ஈடுபடுதல் வேண்டும். இவ்விடயத்தில் குற்றம் சாட்டப்படுகின்ற குறித்த சகோதரர் மிகவும் அவதானத்துடன் செயற்படுதல் அவசியமானதாகும்.

குறித்த சத்தியமானது பொய்ச் சத்தியம் என்பது குற்றச்சாட்டை முன்வைத்த சகோதரர்களால் நன்கு உணரப்பட்டாலும் குறித்த சகோதரர்கள் ஜமாஅத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு - சத்தியத்தின் பின்னர் ஏனைய முஸ்லிம்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வாறான நிலையிலேயே குற்றம் சாட்டப்பட்ட அந்த சகோதரருடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அதாவது, அவர் முஸ்லிம் என்ற அடிப்படையிலேயே நடந்து கொள்ளுதல் வேண்டும். மாறாக, 'அவர் கு.்.ப்ரான வார்த்தைகளைக்கூறினார்; அதனை நிரூபிக்க அதற்காகப் பொய்ச்சத்தியம் செய்தார்' என்ற அடிப்படையில் அவருடன் மாறுபாடான வகைகளில் நடந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஒரு முஸ்லிமுக்குச் செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும் அவருக்குச் செய்தல் வேண்டும்.

ஆனால், கு.்.ப்ரான வார்த்தைகளை அல்லது கருத்துக்களை வெளிப்படுத்திய ஒருவர் தான் கு.்.ப்ரான வார்த்தைகளை அல்லது கருத்துக்களை வெளியிட்டதனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் "அதற்காகத்தான் ஒருபோதும் தௌபாச் செய்யப்போவதில்லை" எனத்தெரிவித்தால் அவரது கு.்.ப்ரின் காரணமாக அவர் ஜமாஅத்தை விட்டும் வெளியேறியவராக அறிவிக்கப்படுவார்.

## முஸ்லிமான ஒருவர் தனது செயற்பாடுகளில் குஃப்ரை வெளிப்படுத்தினால் அவர் மீண்டும் பைஅத் செய்து கொள்ளுதல் அவசியமானதா?

குஃப்ரான செயற்பாடு ஒன்றில் ஈடுபட்ட சகோதரர் ஒருவர் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டினை மறுத்து ''அத்தகைய சம்பவமே நடைபெறவில்லை எனவும் குறித்த விடயம் என்மீதான அவதூறு" எனக் குற்றம் சாட்டப்பட்ட சகோதரர் அது தொடர்பில் சத்தியம் செய்கின்றபொழுது அவரது சத்தியத்தையே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆனால், குறித்த சகோதரர் ஒருவர் நடைபெற்ற சம்பவத்தினை ஒப்புக்கொண்டால், நடைபெற்ற சம்பவத்தின் 'யதார்த்தநிலை' குறித்து குற்றம் சாட்டப்பட்ட சகோதரரிடத்தில் தலைமைத்துவம் விசாரணை மேற்கொள்ளும். அவ்விசாரணையின்போது குறித்த சகோதரர் கூறும் பதில்களில் அவர் வேண்டும் என்றே குஃப்ரான செயற்பாட்டில் ஈடுபட்டமை நிருபிக்கப்படும் பட்சத்தில், அவர் தொடர்ச்சியாக ஜமாஅத்தினுள் இருக்க விரும்பினால், மீண்டும் அவர் பைஅத் செய்து கொள்ளுதல் வேண்டும். ஆனால், அவர் பைஅத் செய்ய மறுப்பாரேயானால் அவர் ஜமாஅத்தினை விட்டும் வெளியேறிய நபராகத் தலைமைத்துவத்தினால் அறிவிக்கப்படுவார். மாறாக, ''தனது அறியாமையின் காரணமாகக் குறித்த குஃப்ரான செயற்பாடு இடம்பெற்றதாகவும் இனிமேல் அவ்வாறான செயற்பாடுகளில்தான் ஈடுபடமாட்டேன்" எனவும் அவர் தெரிவித்தால் அதற்காக அவர் தௌபாச் செய்து கொள்ளுதல் போதுமானதாகுமே தவிர அவர் மீண்டும் பைஅத் செய்து கொள்ளுதல் அவசியமானதல்ல.

**மேற்படி விடயங்களே முஸ்லிமான ஒருவரிடமிருந்து குஃப்ரான வார்த்தைகள், கருத்துக்கள் வெளிப்படல் மற்றும் முஸ்லிமான ஒருவர் தனது செயற்பாடுகளில் குஃப்ரை வெளிப்படுத்துதல் தொடர்பான ஜமாஅதுல் முஸ்லிமீனின் ஆய்வின் முடிவாகும்.**

**குறிப்பு : மேற்படி முடிவுகள் 28/12/2024 - சனிக்கிழமை அன்று கொழும்பு – மஸ்ஜிதுல் முஸ்லிமீனில் இடம்பெற்ற அமீர்மார்கள், உலமாக்களுக்கான ஒன்று கூடலில் உத்தியோகபூர்வமாக வாசித்துக்காட்டப்பட்டன.**